# சபாபதி

## (மூன்றாம் பாகம்-ஓர் ஒத்திகை)


நாடகப்பேராசிரியர்

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.


**இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:—**

லீலாவதி சுலோசனா சாரங்கதரா, மகபதி, காதலர் கண்கள் நற்குல தெய்வம். மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைசுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர் காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விசுவின் மனைவி, மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து: மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப்-அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட் சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிசசந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற்கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ்ப் பேசும் படக் காட்சி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம். மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்-ஐந்து பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளி வரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்பிரமணிய ஆலயங்கள், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்களின் குணங்கள், சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள் முதலியன.

**புதுப் பதிப்பு**


அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.

காபிரைட்] 1950 [விலை [illegible]

உ

# சபாபதி (மூன்றாம் பாகம்)

அல்லது

## ஓர் ஒத்திகை

### நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| சபாபதி முதலியார் .... | கதாநாயகன் |
| சபாபதி | .... சபாபதி முதலியார் வேலைக்காரன் |
| கிருஷ்ணசாமி | .... சபாபதி முதலியார் மைத்துனன் |
| தினகரசாமி நாயுடு .... | சபாபதி முதலியார் நண்பன் |
| சம்பந்த முதலியார் .... | ஓர் நாடகாசிரியர் |
| வரதராஜ ஐயங்கார்<br>சுந்தர ராஜன்<br>வேதபுரீசன்<br>கோபிநாத்ராவ்<br>லட்சுமண முதலியார்<br>முதலியோர் | நடர்கள் |

**கதை நிகழ் இடம்:**—பூவிருந்தவல்லியில் நாடகக் கொட்டகை

**காலம்:**—தற்காலம்.

**1—0—0**

உ

என் தந்தை தாயர்

**பம்மல் - விஜயரங்க முதலியார்**

**பம்மல் - மாணிக்க வேலம்மாள்**

ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கப்பட்டது

# சபாபதி

## (மூன்றாம் பாகம்)

அல்லது

## ஓர் ஒத்திகை

**காட்சி 1.** இடம்:— பூவிருந்தவல்லி நாடகக் கொட்டகை ரங்கத்தின் முற்பாகம்

**சபாபதி முதலியாரும் தினகரசாமி நாயுடும் வருகிறார்கள்.**

ச. மு. வாட் நான்சென்ஸ்! (What nonsence!) பாருங்க நாயுடுகாரு! டைம் இஸ் வெரி நியர் தி நௌ (Time is very near the now!) இன்னம் அந்த கிருஷ்ணசாமி வர்லே கூடண்டி! டோன்ட்கேர் (Don't care) இன்னும் அவன் மூன்று மினிட்சுக்குள்ளே வராப்போனா நான் பிகின் (begin) பண்ணிவிடரேன்—அடே சபாபதி!

[சபாபதி ரங்கத்தின் பக்கமிருந்து வருகிறான்]

ச. ஏம்பா?

ச. மு. எல்லாரும் தயாரா யிருக்கராங்களாடா?

ச. யாரப்பா?

ச. மு. யாரா!—ஆக்டர்சுங் கடா?

ச. இல்லேப்பா, இன்னும் கொஞ்சம் நாழியாகும்பா.

ச. மு. வாட் நான்சென்ஸ்! (What nonsence) அரெ மணி நேரத்துக்கு முன்னே நானு வந்து கேட்டப்போ அல்லாம் தயாராயிருக்குது இண்ணையே?

ச. ஆமாம்பா, அதுக்குமுன்னே அம்பட்டன் வந்திருக்கிறானு இண்ணு கேட்டையா, அத்தொட்டு அத்தெ நான் கேக்கரையாங்காட்டியும் இண்ணு, க்ஷவரம் பண்ண அல்லாம் தயாராயிருக்குது இண்ணு சொன்னேம்பா.

ச. மு. ரெகுலர் இடியட்! (Regular idiot!) இப்ப என்னடா தாமசம்?

ச. இப்பதான் ராணி அம்மாளெ க்ஷவரம் பண்ராங் கப்பா.

ச. மு. ராணியெ க்ஷவரம் பண்ராங்களா! என்னடா அது இடியட்? (idoit)

ச. அதாம்பா, ராணிவேஷம் கட்ராரே, அவரு மீசை யெ அடிக்கராங்க அப்பா.

ச மு என்னடா இது கஷ்டமாயிருக்குது! தி கிரேட் இன் டியன் கிரிடிக் (The great Indian critic) உடனே வந்தூடுவாரே, டிலேயா (delay) பண்ரது? நாயுடுகாரு மீரு என்னமான யோசனே சொல்லுங்க சூடலாம்.

தி. மீசா கொட்டகுண்டா உண்டகூடதோ?

ச. மு. என்ன நாயுடுகாரு, மீருகூட சபாபதி மாதிரி பேச ரைங்களே? பொம்மனுட்டி வேஷக்காரன் மீசை யோடே என்னம்மா ஐயா வர்ரது?

தி. அவுனன்டி—நேனு யோசனேசேஸ்தினி—இதி ஒக கஷ்டம் உண்டாதி.

ச மு. இத்தே சொல்ரத்துக்கா உங்களே கேட்டேன்?—

ச. அப்பா! இன்னொருகஷ்டம் இருக்குது, அத்தே இப் பவே சொல்லிவிடரெம்பா! ராஜாவேஷம் போடர ஐயரு,வேஷம் போட்டுகினு இருந்தவரு, தொண்டே என்னமோ கட்டிகிச்சு இண்ணு, வேஷத்தை எல் லாம் கலேச்சு உட்டு மருந்து ஷாப்புக்குப் போயி தொண்டைக்கு என்னமோ மருந்து தடவிகினு வரப்போயிருக்கிறாரப்பா!

ச. மு. வாட் நான்சென்ஸ்! (What Nonsense) அவன் எப் போ பாத்தாலும் இப்படித்தான்! நாடகம் வந்தா தொண்டே கட்டிக்குது அவனுக்கு. அவன் சகென்ட் சீன் (Second scene) லெ வரவேண்டியிருக்குதே! என்ன செய்யரது இப்போ?

ச. அப்பா!—அப்பா!—நானு ராசாவேஷம் கட்ரெம்பா ஒருநாளைக்காவ? எனக்குக் கூட கொஞ்சம் பாடத் தெரியும்பா.

ச. மு. அடே!—எனக்கு ஒரு பிரிலியென்ட் ஐடியா (Brilli- ant idea) தோணுது—நீ மொதல் சீன்லே ராஜாவா

வா. அது சின்ன சீன்தான்—உனக்கு என்ன பாட்டு எதுண்ணு தெரியுமடா?

ச. எனக்கு "ஐமௌலா குதரெதெய்" பாட்டு ரொம்பா நண்ணு தெரியும்.

ச. மு. தட் இஸ் ரைட் (That is right) அத்தெயேபாடு! அது இந்துஸ்தானி, ஒருத்தருக்கும் அர்த்தம் ஆகாது—அப்பறம்--நாலு வார்த்தையாவது சொல்லணுமேடா?

ச. அத்தெ காகிதத்திலே எழுதிகொடுத்தூடப்பா—அத்தெ மொள்ளமா பாத்து படிச்சூடறேன்.

ச. மு. சே! சே! சே! அதெல்லாம் கூடாது. நாலு நாலு வார்த்தெ எழுதிதர்றேன், அத்தெ குருட்டுப்பாடம் பண்ணி ஒப்பிச்சூடு.

ச. நாலு வார்த்தெதானே? எழுதிக்கொடுத்தூடப்பா.

ச. மு (சேபியிலிருந்து ஒரு துண்டு காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து) "பிள்ளைக்கோசரம் காட்டுக்கு தவஞ்செய்ய நான் போகிறேன்"—இத்தெ நண்ணு குருட்டுப் பாடம் பண்ணிக்கோ. பாட்டே பாடிவிட்டு இத்தெ சொல்லிப்புட்டுப் பூடு.

ச. அப்படியே அப்பா!—ரொம்ப சந்தோஷம்பா! ராஜா வேஷம் எனக்கு! ராஜா வேஷம் எனக்கு!

ச. மு. போ போ! சீக்கிரம் டிரெஸ் (dress) பண்ணிக்கோ சரியா ராஜாவாட்டம். [சபாபதி உள்ளே போகிறான்.]

**கிருஷ்ணசாமியும் சம்பந்தமுதலியாரும் வருகிறார்கள்.**

ச. மு. வாப்பேன் கிருஷ்ணசாமி--இவர் யாரப்பேன்? சீனிவாச ஐயங்காரே இட்டார்லே?

கி. இல்லெ அத்தான்! அவரு இண்ணைக்கு ஏதோ அவசரமா அவுங்க ஊருக்குப் போவணும் இண்ணு பூட்டாரு, அவருக்குப் பதிலா இவரே அனுப்பிச்சாரு. அவருடைய இன்டிமேட் பிரன்ட் (intimate friend) இவரு, இவருக்குக்கூட கொஞ்சம் நாடகங்களெப் பத்தி தெரியும்; கிரிடிசிசம் (criticism) கொடுப்பாரு.

ச. மு. ரொம்ப கிலாட் (glad!) வாங்கசார்! ரொம்ப வெல் கம், (Welcome)—உக்காருங்க சார்—அதிருக்கட் டும், இத்தனி நாழி என்னுப்பேன்?எத்தனிமணிக்கு வர்ரேன் இண்ணு சொன்னே, எத்தனி மணிக்கு வந்தே? பங்ச்சுவாலிடி இஸ் எ கிரேட் டிபிகல்டி இன் தி இன்டியன் நேஷனலிடி (Punctuality is a great dffficulty in the indian Nationality)

சம். என்ன! மொதலியார் அவாள் இங்லீஷ் பொயட்ரி (English Poetry) கூட கம்போஸ் (Compose) பண் ராப்போலெ இருக்குதே.

கி. இங்லீஷ் பொயட்ரி (English Poetry) மாத்திரமா, சான்ஸ்கிரிட், இந்துஸ்தானி (Sanscrit Hindustani) அல்லாம் கம்போஸ் பண்ணுவார் அவர்.

ச. மு. அதெல்லா மிருக்கட்டும் அப்பேன்! லேட்டா வந்தத் துக்கு காரணம் சொல்லலேயே நீ! வீ ஹேவ் பீன் வெய்டிங் ஹியர் கேட்சிங் ஹோல்ட் ஆப் சிக்ஸ் ஒ கிளாக்!போத் நாயுடு அண்டு மைசெல்ப்(We have been waiting here catching hold of 6 O Clock! Both Nayudu and myself.)

சம். கிருஷ்ணசாமி—மொதலியார் சொல்ரது எனக்கு அர்த்த மாகலெ.

கி. அதுவா! உங்களுக்கு கொஞ்சம் பழகணும். மொத லியார் இடியம்ஸ் டிக்ஷனரி (idioms dictionary) அல் லாம் வேறே! கேட்சிங் ஹோல்ட் ஆப் பைவ் ஒ கிளாக்(Catching hold of 5 O' Clock) இண்ணு, அஞ்சி மணி புடிச்சிகினு காத்துக்கினு இருக்கிறூர். இண்ணு அர்த்தம் —அத்தான், நீங்க கோவிச்சிக் காதைங் கோ— வரும்போது மோடாரு (Motor) க்கு ஆக்சி டென்ட் (accident) ஆச்சுது—டைர் பர்ஸ்ட் (Tyre burst) ஆச்சுது வழியிலே.

ச. மு. வோணும்! அதுக்குத்தான் எப்பவும் ஜாக்கிரதை யாயிருக்கணும், உன்னெப்போலே. எனக்கு மோ டார் ஆக்சிடெண்ட் (accident) ஆச்சி இண்ணு எப்

பவாறு கேள்விப் பட்டிருக்கிறையா இத்தனை வரு ஷமா ?

கி இல்லே—ஆறு—மோட்டார்கார் ஏது உங்களுக்கு?-- புதுசா என்னமாறு வாங்கனேங்களா என்று ?

ச. மு. வாங்கலெ ! மோட்டார்கார் இருந்தாத்தானே ஆக்சி டென்ட் (accident) ஆகும், இல்லாப் போறு என் னமா மோட்டார் ஆக்சிடெண்ட் (accident) உண்டா கும் ? அத்தோட்டுதான் வாங்காதெ இருக்கிறேன்.

சம் ஏம்பேன்! கிருஷ்ணசாமி அது ஒரு நல்லவிதமான ஜாக்கிரதைதான்

கி. ஏன் அத்தான், நாழியாயிபோச்சே ரிஹர்சல்பிகின் (Rehearsal begain) பண்றதுதானே?

ச. மு. இதோ at once! எல்லாம் முன்னேயே ரெடியா (ready) இருக்குது, ஹாப் அவ் அவரா (Half an hour) வெயிட் (wait) பண்ணிக்கினு இருக்கராங்க; உங்க சுகுண விலாச சபையைப் போலெ இண்ணு நெனேச்சிகினேயா என்று?—இதோ! (ஒரு புறம் பக்கப்படுதா அண்டைப் போய்) அடே சபாபதி ! எல்லாம் தயாரா யிருக்குதாடா?—இன்னும் அஞ்சி நிமிஷமா?—(உறக்க) ஆல் க்வைட் ரெடி (All quite ready) அப்பேன், நானும் நாயுடுகாரும் இந்தப் பக் கம் உக்கார்ரோம். நீயும் உங்க பிரெண்ட் (friend) உம் அந்தப்பக்கம் உக்காருங்க.

[அப்படியே உட்காருகிருர்கள்.]

கி. அத்தான், உங்களுக்கு-இந்த-சம்பந்த முதலியார்— தெரியுமா?

[சம்பந்த முதலியார் கிருஷ்ணசாமியின் சொக்காயைப் பின் புறமிருந்து இழுக்கிருர்.]

ச மு. நேராப் பாத்ததில்லே, கேழ்விபட் டிருக்கிறேன் ஏன் கேக்கரே அப்பேன் ?

கி வேறொண்ணுமில்லே அவரையும் இட்டாந்து காண் பிச்சா, ஏதாவது சஜ்ஜஸ்ஷன் (suggestion) கொடுப் பாரே இண்ணு யோசிக்கிறேன்.

ச மு இந்த டிராமா எழுதராரே அவர்தானே?—வேணும் பேன், அவர் வந்து இத்தெப் பாத்தாருண்ணு, ஏதா வது ஐடியாஸ்காபி (ideas copy) பண்ணிகினுபூடுவார்.

சம். அது வாஸ்தவம்தான்—இப்போ நடக்கப் போர நாடகத்தின் பெயரென்ன முதலியார்?

ச. மு. ஏ! அத்தெ சொல்ல மறந்துபூட்டேனே-இதும்பேர் "தி மிஸ்டீரியஸ் மிஸ்பார்ட்சூன்ஸ் ஆப் தி மானர்க் ஆப் மகரதேசா" (The Mysterious misfortunes of the monarch of Makaradesa) இண்ணு பேர் வைச்சி இருக்கிறேன்.

சம். அத்தெ தமிழ்லெ எப்படி சொல்ரதுங்க?

ச. மு. அதுக்குத்தான் ஒரு யுக்தி பண்ணி இருக்கிறேன்! "ஆர் (or) மோகனுங்கி" இண்ணு பேர் வைச்சிருக்கி றேன். இங்கிலீஷ்லே போட்டா அப்படிப்போடறது, தமிழ்லே போட்டா இப்படி போடறது.

கி. மகரதேசமா? அது எங்கே இருக்குது அத்தான்?

ச. மு. அதாம் மொதல் மிஸ்டரி! (Mystery) எங்கே இருக் குது சொல் பாக்கலாம்.

கி. நான், இந்த ஐம்பத்தாறு தேசத்திலே அந்தப்பேர் கேள்விப்படவில்லையே இண்ணுபாக்கரேன்.

ச. மு. யூ ஆர் ரைட் (you are right) அதுலே கிடையவே கிடையாது! இதுலே ஒரு பெரிய அட்வான்டேஜ் (advantage) பாரப்பேன், எங்கேயானு இருக்கர தேசமா போட்டா, சீனுவாசய்யங்காரெப் போலே கிரிடிக்ஸ் (critics) யாராவது அந்ததேசத்து டிரெஸ் (dress) மாதிரி ஆக்டர்சுக்கு (actors) ஏம் போடலெ இண்ணு கேப்பாங்க! இல்லாத தேசமா இருந்தா, ஒருத்தரும் அப்படிக் கேக்கமாட்டாங்க!

சம். அது ஒரு பெரிய அட்வான்டேஜ் (advantage) தா னுங்க—இப்போ எந்தசொசைடி (society) யார் இத் தெ ஆக்ட் (act) பண்ராங்க?

ச. மு. மாம்பலம் ஒரிஜினலி பாய்ஸ் கம்பெனி (Mambalam Originally Boys Co.) இண்ணு இருக்கராங்க, அவுங்க ஆக்ட் (act) பண்ராங்க.

கி. ஆமாம் அத்தான், கதெ எங்களுக்குத் தெரியாதே, எப்படி பாலோ (follow) பண்ரது நாங்க?

ச. மு. கதெயெ முழுதலும் சொல்லி விட்டா மிஸ்டரி (Mystery) பூடும்பேன், ஆனலும் நீங்க கிரிடிசிசம் (criticism) சொல்ல வேண்டி யிருக்கிறபடியினலே இன்னது நடக்கப்போவுது இண்ணு சுருக்கமா சொல்லிக்கினு வாரேன்.

ச. (பக்கத்திரையிலிருந்து) மொதல்சீன் தயாராயிருக்கு தப்பா!

ச. மு. சரிதான் கொஞ்சம் பொறுக்கச்சொல் — நான் பெல் (Bell) கொடுப்பேன் அப்ப ஆரம்பிக்கச் சொல்— மொதல் சீன் என்னண்ணு, மகரதேசத்து ராஜாவுக்கு கண்ணலம் ஆயிபத்துவருஷமாயும் அவனுக்கு புள்ளே பொறக்கலே, அவனுடைய நாலுமந்திரிங்க மொதல் சீன்லே பாடிக்கினு இருக்கராங்க

சம். ராஜாவுக்குப் பிள்ளையில்லேயே இண்ணு பாடிக்கினு இருக்கராங்க?

ச. மு. என்னசார்? உங்களுக்கு நாடக சமாசாரம்ஒண்ணும் தெரியாதுபோலெ இருக்குதே. மொதல்லே எப்பவும் ஹாப்பி (happy) ஆ ஆரம்பிக்கத் தேவையில்லையா? அத்தொட்டு தான் மந்திரிங்களும் வேடிக்கையா, சந்தோஷமா, பாட்டு பாடிக்கினு இருக்கராங்க. அப்புறம் அவுங்களுக்கு அரண்மனையிலே இருந்துஒரு ஆள்வந்து ராஜாவுக்கு புள்ளே பொறக்கலே இண்ணு தெரிவிக்கரான்.

சம். எஸ்! (Yes) பத்து வருஷமா ராஜாவுக்குப் பிள்ளை இல்லே என்ற சமாசாரம் அவனுடைய மந்திரிகளுக்கே தெரியாமலிருந்தது, ஒரு பெரிய மிஸ்டரி (Mystery) தான்.

ச. மு. ரைட் யூ ஆர்! (Right you are) நீங்கநல்ல கிரிடிக் சார். அதுக்குத் தான் மிஸ்டீரியஸ் மிஸ்பார்ட்சூன்ஸ் ஆப்

தி மானர்க் ஆப் மகரதேசா "Mysterious misfortunes of the Monarch of Makaradesa" இண்ணு பேர் கொடுத்தேன். நீங்க இப்படியே உங்க கிரிடிசிசம் (criticism) அப்பப்போ கொடுத்துகினே —வாங்க— ஏதாவது தெரியாப்போனு என்னே கேளுங்க நான் எக்ஸ்பிளெயின் (explain) பண்ரேன். ஆரம்பிக்கச் சொல்லவா?

சம். சொல்லுங்க மொதலியார்.

ச. மு. எஸ்! (Yes!) (மணியடிக்கிறார். உள்ளே ஒரு பாட்டு கேட்கிறது. இரண்டடி பாடியவுடன் ரங்கத்தின் திரை மேலே தூக்கப்படுகிறது, உடனே அடடே! தூக்காதே! தூக்காதே! என்ற சப்தமுண்டாகிறது. திரை ரங்கத்திலிருக்கும் ஒரு மந்திரியின் தலைகுட்டையைச் சுற்றிக்கொண்டு மேலே போகிறது. அந்த மந்திரி, மற்றொருவனை அடிக்க அவன் இவனைத் திரும்பி அடிக்க, இருவரும் சண்டை போடுகிறார்கள். பின் புறமாயிருக்கும் இரண்டு மந்திரிகளும் சண்டை போடுகிறார்கள்.)

கி (அதிகமாய்ச் சிரித்து) ஹா! ஹா! ஹா! என்ன அத்தான் இதுதானு ஹாப்பி பிகினிங்! (happy beginning)

ச. மு இரப்பேன்! என் வயத்தெரிச்சலெ கொட்டிக்காதே —என்னடா இது சண்டே? என்னடா இது சண்டே?

மு.மந். இல்லே மொதலியார், நீங்கதான் தீர்மானம் பண்ணுங்க. மொதல் பாட்டு அல்லாம் நண்ணு பாடனும் இண்ணு சொன்னீங்களே இண்ணு, இந்தகோபால சாமியே, உனக்கு தொண்டே கட்டிக்கினு இருக்குதப்பா, நீ எங்களோடு சேர்ந்து பாடாதே, சும்மாயிரு இண்ணு சொல்லி ஆரம்பிச்சோம். ஆரம்பிச்சோமா, தெரெ தூக்கும்போது, என் தலெகுட்டெமொனெ அதுலே மாட்டிக்கினு தலைகுட்டையே இழுத்துக்கினு போரெத்தே பாத்து, தூக்காதே! தூக்காதே! இண்ணு கேசு கிட்ட சொல்லிகினே இருக்கரென்-இவன் என்ன செய்தா, தூக்கு தூக்கு இண்ணு ஒரக்க கத்தனு! அவன் தூக்கிவுட்டா!

இ.மந். இவன் தலகுட்டெ மாட்டிகிச்சி இண்ணு எனக்கு என்னமாப்பா தெரியும்? பாதிதெரெ தூக்கன உடனே, விடு விடு! இண்ணேன், மொதல்லையே அபச

குனம் கூடாதிண்ணு, தூக்கு தூக்கு, இண்ணு சொன்னேன்–அதுக்கு பாரப்பா எப்படி என் கன்னத்திலே அடிச்சான்! என்மீசை யெல்லாம் பூட்டுதப்பா!

ச. மு. எண்டாப்பா இவங்கதான் சண்டெ போட்டாங்க— நீங்க ஏன் சண்டே போட்டிங்க?

முமர் எங்களுக்கு இந்த சீன்லே பேச்சு ஒண்ணுமில்லையே நாங்கள் என்ன செய்யரது இண்ணு கேட்டத்துக்கு, அண்ணைக்கி கடைசி ஒத்திகையும்போது, அவங்கரெண்டு பேரும் என்ன ஆக்ஷன் (action) செய்யராங்களோ அதேமாதிரி நீங்களும் செய்யுங்க இண்ணு சொன்னீங்களே சார்.

ச.மு. அதுக்கோசரம் நீங்களும் சண்டைபோட்டைங்களோ!

சம். இவங்கரொம்ப ஒபீடியன்ட் ஆக்டர்ஸ் (Obedient actors) சார். நீங்கள் சொல்ரபடியே செய்யராங்க— அது ஒரு கிரேட் பாயின்ட் (great point)

ச. மு. அல்லாம் சரிதான், இப்போ ஓபனிங் சீன் (opening scene) எல்லாம் ஸ்பாயில் (spoil)ஆ போச்சே! இதுக்கென்னசெய்யரது?—ஆல் ரைட்! ஒமிட் ஹோல் சீன் நெக்ஸ்ட் சீன் பிகின் (All right omit whole scene— next scene begin) பண்ணச் சொல்.

**வேதபுரீசன் பக்கப்படுதா அருகிலிருந்து ஓடிவருகிருன்**

வே. அப்பப்பா!அப்படி பண்றதே அப்பா எனக்கிருக்கிறதெல்லாம் இந்த சீன்லேதாம்பா. ஒரு சின்ன காரக்டர் (character) அப்பா! கொஞ்சம் பொறுத்துக்கொப்பா—எம் போர்ஷன் (portion) மாத்திரம் சொல்லிவிடரம்பா.

ச. மு. ஏண்டாப்பா அவங்க அழுகது போதாது, நீயும் அழுணுமோ!

வே. இல்லே இல்லேப்பா! ரெண்டு நிமிஷத்திலே சொல்லிடரேம்பா! கொஞ்சம் பெரியமனசு பண்ணப்பா.

கி. ஏன் அத்தான்! பாவம், அலௌ (allow) பண்ணுங்களேன், அவ்வளவு கேட்டுக்கரானே.

ச. மு. ஆனு சீக்கிரம் சொல்லியழு—இல்லே அப்பேன், ரொம்ப புட் அவுட் (Put out) ஆகுது பார் இவங்க [ளாலே

வே. உம்! உம்!

[உரக்க அழ ஆரம்பிக்கிருன்]

சம். ஏன் சார் துக்கபடரானே, நீங்கதான் உத்தரவு கொடுத்தைங்களே?

ச. மு. இல்லே இல்லே, ஹி இஸ் ஆக்டிங் (He is acting)

வே. மந்திரிகளே! [இன்னும் உறக்க அழுகிருன்]

ச. மு. ஏன் சார், இவன் நல்லா அழலே?

சம். ஓ எஸ்! (Oh yes!) ரொம்ப நன்னு அழரான். ஆனுல் ஒரு சஜ்ஜஸ்ஷன் (suggestion) அவன் சொல்ரது ஒண்ணும் கேக்கலே, ஒண்ணு அழுதாவது சொல்லச் சொல்லுங்கோ, அல்லது சொல்லியாவது அழச் சொல்லுங்க. ரெண்டும் செய்தா டிஸ்டிங்க்ட் (distinct) ஆக இல்லே.

ச. மு. அது வாஸ்தவம்தான். அப்பா வேதபுரீசன், உன் வார்த்தையெ சொல்லிவுட்டு அழு.

வே. அண்ணைக்கி அழுதுவுட்டு சொல்லச் சொன்னையே அப்பா?

ச. மு. ஆமாம், இப்போ நம்ப பிரன்ட் (friend) உன்னே சொல்லி அழச் சொல்ரார்; அந்த டிபரன்ஸ் (difference) பாக்கணும்.

வே. மந்திரிகளே! இம்முறையும் மகாராணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாக தெரிவிக்கச் சொன்ஞர்கள். [மறுபடியும் அழ ஆரம்பிக்கிருன்.]

ச. மு. ஏன் சார், இந்த ஆக்டர் நன்னு அழலே!

சம். ஸ்ப்லென்டிட் (splendid) போதும்—நிறுத்தச் சொல்லுங்கோ—அப்புறம் சொல்லச் சொல்லுங்க பாக்கலாம்.

ச. மு. அவன் போர்ஷன் (portion) அவ்வளவுதான்.

சம். ஓ! ஐ சி! (Oh I see!) அதான் ஓயாதே அழரான் போலே இருக்குது. [எல்லோரும் நகைக்கிருர்கள்.]

வே. என்னுப்பா அல்லாரும் ஏன்னெபாத்து சிரிக்க ராங்க! இன்னொரு நாடகத்துலே எனக்கு சிரிக்கிற போர்ஷன் (portion) கொடு அப்பா அப்போ அல்லாரையும் அழுவைக்கிறேன். [உள்ளே போகிறன்.]

கி. அத்தான், இந்தமாதிரியா போனு ரொம்பநாழி ஆவும்போலே இருக்குதே! நெக்ஸ்ட் சீனு (Next scene) க்கு போகச் சொல்லுங்க:

ச. மு. ஆமாப்பேன், நெகஸ்ட் சீன் (Next scene) (மணியடிக்க ரங்கத்தில் திரைவிடப்படுகிறது) நெக்ஸ்ட் சீன் (Next scene) லே பஸ்ட் (first) ஹீரோ (Hero) வர்ரார்.

சம். அதென்னசார் அது பஸ்ட் ஹீரோ? (first Hero?)

ச. மு. இந்த டிராமாவிலே திரீ ஹீரோஸ் (three Heroes,) பஸ்ட் ஹீரோ (first Hero) செகென்ட் ஹீரோ, (second Hero,) தர்ட் ஹீரோ (third Hero) அது ஒரு பெரிய மிஸ்டரி (Mystery;) அல்லாம்பாருங்க சொல்ரேன்.

சம் ஏன்சார்? இது என்னமோ பாய்ஸ் சொசைடி (Boys society) இண்ணீங்களே, இதுவரைக்கும்வந்த ஆக்டர்ஸ் (actors) எல்லாம் பெரியவங்களா இருக்கராங்களே?

மு. உங்கபேர்லெதப்பு சார்; கிரிடிக்ஸ் (Critics) பண்ரவங்கல்லாம் ஜாக்கிரதையா கேக்கணும். நான் என்ன சொன்னேன்? மாம்பலம் ஒரிஜினலி பாய்ஸ் சொசைடி (Originally Boys Society) இண்ணு சொன்னேன். இருபது வருஷத்துக்குமுன்னே ஸ்டார்ட் (start) பண்ணப்போ ஆல் ஆக்டர்ஸ் (all actors) பாய்சுங்களாயிருந்தாங்க இப்போ எல்லாம் பாதர்ஸ் ஆப் பாய்ஸ் (fathers of Boys) ஆபூட்டாங்க: அத்தொட்டு பேரே நான் மாத்திவிட்டேன்—மாம்பலம் ஒரிஜினலி பாய்ஸ் சொசைட்டி (Mambalam Originally Boys Society) இண்ணு. நெக்ஸ்ட் சீன் பிகின்ஸ் (Next scene begins)—கொஞ்சம் சைலன்ட்

(silent) ஆ இருக்க; பஸ்ட் ஹீரோ (first Hero) கொஞ்சம் நியு ஆக்டர் (New actor)என்னெபாத்தா கொஞ்சம் நர்வ்ஸ் (nerves) ஆ பூடுவான், நான் திரும்பி உக்காந்துகிறேன்.

[அப்படியே செய்து, மணியடிக்க திரை மேலே போகிறது.]

கி. என்ன delay அத்தான்?

ச. மு. ஹீரோ (Hero) அல்லா, மொள்ளமாநா வரணும்.

சம். ஆமாம்சார், இந்த சீன்லே என்ன நடக்கப் போவுது? சொல்லலையே.

ச. மு. ஓ! எஸ்' (Oh yes!) அத்தே மறந்தேன். இந்த சீன்லே மகரதேசத்து ராஜா எப்பப்பாத்தாலும் வருஷா வருஷம் தனக்குப் பெண்ணே பிறக்குது பிள்ளெ பொறக்கலே இண்ணு துக்கப்பட்டு காட்டுக்கு தவம் பண்ணப்போரான்—இதோ வர்ராரு பாருங்கோ

சபாபதி இருக்கிற உடுப்புகளை யெல்லாம் போட்டுக்கொண்டு ''ஹைமௌலா'' என்னும் பாட்டைப் பாடிக்கொண்டு வருகிறான்.

கி [சபாபதி முதலியார் அருகில் போய் மெல்ல] என்ணத்தான்! இவன் நம்ப சபாபதி பையனுட்டம் இருக்குதே?

ச. மு. [ஒரு புறமாய் அவனிடம்] ஆமாம்பேன்! கொஞ்சம் சும்மாயிரு—சமாசாரம் அப்பறம் சொல்ரேன்.

[சபாபதியின் உடுப்புகள் விழ்ந்துவிழ, அவை களையெல்லாம் எடுக் கொண்டு விரைவில் உள்ளே போகிறான்.

சம். என்னுங்க சார், ராஜா உள்ளே பூட்டாரே!

ச. மு இல்லே, கொஞ்சம் பால் சாப்பிடப் போயிருக்கிறார்.

சம். இவர்தானு மகரதேசத்து ராஜா?

ச. மு. ஏன் கேக்கரைங்க?

சம். இல்லே-கருப்பாயிருக்கரரே இண்ணு கேட்டேன்.

ச. மு நீங்க கேட்டது நல்லதாச்சு. இந்த பாயின்ட் (Point) ரொம்ப நாளா எக்ஸ்பிளெயின் (explain) பண்ணணுமிண்ணு இருந்தேன் மகரதேசத்து ராஜா கருப்பா யில்லே இண்ணு எங்கேயானு எழுதியிருக்குதா?

சம். இல்லெ, ரொம்பவாஸ்தவம். இவர் என்னமோ துக்கப்பட்டுக்கிணு காட்டுக்குப்போரார் இண்ணெங்களே பாட்டு துக்கமான பாட்டா காணமே?

ச. மு. அது கேக்கரைங்களோ? இது ஹீரோஸ் ஒபனிங் சாங்(Hero's opening song) இண்ணுபேர், ஹீரோ ஆக்டர்ஸ (Hero actors) எல்லாம் வரும்போது ஒரு சாங் (song) பாடணும், அது துக்கமா இருக்கலாமா?

[சபாபதி மறுபடி வருகிறான்.]

சம். அந்த பாட்டெ இனொருதரம் பாடச்சொல்லுங்க கொஞ்சம்.

ச. மு. ஆல் ரைட் (All right!) அடே சபாபதி:—உம்!-ஐயா ராஜா! முன்னே பாடன பாட்டே இன்னொருதரம் பாடுங்க.

ச. இனொருதரமாப்பா பாடரது அத்தெ?

ச. மு. ஆமாய நீ கேட்டதில்லே, ஆத்தி சூடியிலே ஒளவை யார் சொல்லி இருக்கராங்களே. "செய்வனத் திரும்பச் செய்" இண்ணு. ஏதாவது ஒண்ணே செய்தா அதெ மறுபடியும் செய்யணும், அப்பத்தான் பழக்கமாகும்.

ச. உம்! [மறுபடியும் ஹைமௌலா பாட்டு பாடுகிறான்]

ச. மு ஏன்? பாட்டு நண்ணா இருக்குதா?

சம். பாட்டு நண்ணாதான் இருக்குது, இவர் யார்கிட்ட சொல்ரார் குதிரையே தேய்க்கச் சொல்லி?

ச. மு. குதிரெயெ தேய்க்கச் சொன்னாரா? எப்போசொன்னாரு?

சம். என்னமோ குதிரெதேய் இண்ணு பாடறா போலே இருந்துதே?

ச. மு. ஓ! அதுவா! அது தமிழ்பாட்டல்லா, ஹிந்துஸ்தானி பாட்டு

சம். இவர் ஹிந்துஸ்தானிதான் பேசரதோ?

ச மு. என்னாசார் உங்களுக்கு ஸ்டேஜ் (stage) சமாசாரமே ஒண்ணும் தெரியாது போலே இருக்குதே! ஓபனிங் சாங (Opening song) எந்த பாஷையிலே இருந்தா என்ன!

ச. ஆஹா! காட்டுக் கோசரம்—பிள்ளைக்காக—தவசு செய்ய—நான் போரேன்.

கி. ஆஹா ஹா! [உரக்க சிரிக்கிருன்.]

ச. ஏ ஏ! —தவசுக் கோசரம்—காட்டுக்காக—பிள்ளைக் குப்போரேன். அல்லாவே—மறந்து பூட்டுதேப்பா—நீ கோவிச்சிக்காதே அப்பா! சரியா சொல்ரேம்பா!—நானிப்போ, போகறத்துக்கோசரம், தவசுசெய்ய—அப்பறம் என்னுப்பா?

ச. மு. எத்தையானு சொல்லிவிட்டு போடா வூட்டுக்கு!

ச. ஆ! இப்போ காபகம் வந்துது! பிள்ளைக்கோசரம்—தவசுசெய்ய நான்—ஊட்டுக்குப் போகிறேன். [போகிருன்.]

சம். அது நல்ல யோசனைதான் சார், நீங்க கண்ணு யோசித்துப் பாருங்கள்.

கி. என்னுத்தான் இது? இவனுக்கு யாரத்தான் ஹீரோ போர்ஷன் (Hero portion கொடுக்கச் சொன்னது! (நகைக்கிருன்.)

ச. மு. இல்லெப்பேன்—எல்லாம் இன்சபிஷன்ட் டைம் (in sufficient time) ஆயிருக்குது இப்போ.

சம். அப்படி இண்ணு எனக்கு அர்த்தமாகலே அப்பேன்

கி. ஓ! (Oh!) அது உங்களுக்கு கொஞ்சம் பழகனுத்தான் தெரியும். அத்தானுக்கு ஒரு செபரேட் டிக்ஷனரி (separate Dictionary) இருக்குது. இன்சபிஷன்ட் டைம் (Insufficient time) இண்ணு, போதாக் காலம் இண்ணு அர்த்தம்.

[இந்திரன் வேஷதாரி ரங்கத்தின் மீது வருகிருர்.]

ச மு. சார்,—இந்த ஸ்மால் டிபெக்ட்ஸ் (small defects) களை எல்லாம் கொஞ்சம் நீங்க நெவர் மைன்ட் (never mind) பண்ணணும்.

சம். அப்படியே—அதுக்கு என்ன?

இந். ஆஹா! நான் என்ன செய்வேன்! எப்படியாவது இந்த மகரதேசத்து ராஜாவின் தவத்தைக் கெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் என்பதவிக்கே வழி வைப்பான். ஆகையால் நான் உடனே சென்று அப

சுர ஸ்திரீகளை யனுப்பி இவன் தவத்தைக் கலைக்க வேண்டும்.

(பக்கப்படுதா அருகிலிருக்கும் ஒருவரிடம்) அப்புறம் என்ன? ஒருவன் உள்ளிருந்து "இரண்டு அபசுர ஸ்திரீகள் வருகிறார்கள்" என்று சொல்லுகிறான்.)

இந். இரண்டு அபசுர ஸ்திரீகள் வருகிறார்கள். ஆஹா அபசுர ஸ்திரீகளே! நீங்கள் உடனேசென்று இந்த மகரதேசத்து மன்னனுடையமாதவத்தை மழுங்கச் செய்யுங்கள். இதுதான் என்கட்டளை. [போகிறான.]

கி. என்னத்தான் அது? உங்கஅபசுரஸ்திரீகள் வரவே யில்லையே!

ச. மு. அவங்க டிரஸ்ஸிங் (dressing) இன்னும் முடியலே போலே இருக்குது. இதுதான்சார் இத்த பிமேல் ஆக்டர்ஸ் (female actors) கிட்ட கஷ்டம். அவங்களுக்கு பவுடர் (Powder) போட ஒரு ஆள்வேணும், நகைபோட ஒரு ஆள்வேணும், பொடவைகட்ட ஒரு ஆள்வேணும், அதுலே டிலே (delay) ஆகுது.

சம். ஆனா, இந்திரன் இரண்டு அபசுரஸ்திரீகள் வருகிறார்கள் இண்ணு சொன்னாரே.

ச. மு. அது கொஞ்சம் மிஸ்டேக் பண்ணிவிட்டான் சார். உள்ளே இருந்து பிராம்டர் (Prompter) இரண்டு அபசுர ஸ்திரீகள் வருகிறார்கள் இண்ணு, அத்தெ நன் போர்ஷன் (Portion) இண்ணு நினைச்சிகினு அத்தையும் சொல்லி விட்டான். இருந்தாலும் இவன் குட் ஆக்டர் சார் (good actor sir.)-என்சார் இவன் ஆக்ட் (act)டுக்கு என்ன கிரிடிக்ஸ் (critics) சொல்ரைங்க?

சம். கிரிடிசிசம் (criticism) ஒன்றுமில்லை. இரண்டுமூன்று சந்தேகங்கள், அதை தெளிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ச. மு, கேளுங்கள் சார்! டோன்ட் பி ஷைனஸ் Don't be shyness!) வெக்கம் சிக்கம் எல்லாம் விட்டு விட்டு தாராளமா கேளுங்கள்.

சம் மொதல்லே, இந்த ராஜா தேசத்துக்கு இந்திரன் எப்படி வந்தார்?

ச. மு. அது ஒரு மிஸ்டெரி; எக்ஸ்பிளெயின் (Mystery;Explain) பண்ணு சிம்பில் (Simple) ஆ பூடும். இந்திரன் மறைவிலேஇருந்து என்னநடக்கிறது இண்ணு பாத்துகினு இருந்தான்; சமாசாரம் தெரிஞ்ச உடனே, தன் ரூபத்தோடே வெளியே வந்தான்.

சம். அது நல்ல ஐடியா (idea) தான்!—அப்புறம், இந்திரன் தேவலோக வாசியாச்சே, அவர் கறுப்பாயிருக்கிறதாக நான் படித்ததில்லையே, இந்த இந்திரன்--

ச. மு. தாங்கிஸ் சர் (Thanks sir)! நீங்க எப்போ கேப்பைங்க இண்ணு காத்துகினு இருந்தேன். இப்போ இந்தியாவிலே ஸ்டேஜ் (stage)லே ஆகடுபண்றதெல்லாம் தப்பு சார்; ரொம்ப ஸ்டடி (study) பண்ணிபாத்தேன் நீங்க திருவள்ளூர் சொல்லி இருக்கிறது சரி தான் இண்ணு ஒப்புகிறைங்களா மாட்டைஙகளா?

கி அது யார் அத்தான் திருவள்ளூர்?

ச. மு. பாருங்கசார்! பிள்ளையாண்டான் தமிழ்லே பி. ஏ. பாஸ் பண்ணி யிருக்கரான்—திருவள்ளூர் இன்னார் இண்ணு தெரியாது! தமிழ் ஸ்டடி (study) ஏ இப்போ கெட்டு பூட்டுதுங்க இந்தயூனிவர்சிடியாலே! (University) ஏம்பேன் ? குறள் படிச்சதில்லே நீ? குறள்யார் எழுதினது !

கி. திருவள்ளுவரா! ஓ! ஐ சீ! (Oh I see )

சம். திருவள்ளுவர் தப்பா சொல்லமாட்டார் என்று ஒப்புக் கொள்ள வேண்டியது தான்.

ச. மு. அவர் "ஐந்த வித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங் கரி" இண்ணு சொல்லி இருககிறுரு, அத்தை படிச்சி யிருககிறைங்களா நீங்கள் ?

சம். படிச்சிருக்கிறேன்—அதில் "இந்திரனே சாலுங கரி" என்றால் அர்த்தம்?

ச. மு இந்திரன் மிகவும் கறுப்பு, இண்ணு அர்த்தம் கரி இண்ணு யானே இண்ணு நீங்க அர்த்தம் பண்றப் போலேஇருக்குது. அதுதப்பு, சந்தர்ப்பத்தேபாத்து அர்த்தம் பண்ண வேணும்—இந்திரன் யானெயெ போலே ஆனன் இண்ணு, என்ன அர்த்தமாகுது?

இந்திரன் கவுதமர் சாபம்கொடுத்த உடனே, கறுப்பா போனான் இண்ணு, அர்த்தம் சரியாப்போகுது. இது ரொம்ப யோசனே பண்ணிகண்டுபிடிச்சேன் இந்த அர்த்தத்தே! பாருங்க, திருவள்ளுர் ரொம்ப கெட்டிகாரருங்க.

சம். இந்த அர்த்தம், மொதலியார், ரொம்ப ஒரிஜினல் (Original) அர்த்தம்தான். நான் ஒப்புக்கொண்டேன். கடைசிசந்தேகம்—இந்த ஆக்டர்((actor)ஏன் பாடிக்கொண்டு வரவில்லே?

ச.மு. ரொம்ப சிம்பில் ரீசன் (Simple reason) இந்தஆக்டரு (actor)க்குப் பாடத்தெரியாது! அவ்வளவு தான்

சம். ரொம்பசரி:—அப்புறம் என்ன சீன் சார்?

ச. மு. நெக்ஸ்ட் சீன் (Next Scene) ரொம்ப இம்பார்டென்ட் சீன் (important Scene.) இதிலே ஹீரோ (Hero) வர்ரார்—அதாவது செகன்ட் ஹீரோ (Second Hero) ரொம்ப பெரிய ஆக்டர் (actor) ரொம்பபெரிய பெரிய பாட்டுங்கல்லாம்பாடுவார்! ஆக்டிங் அன்யிமாஜினபில்,மியூசிக் அன்அப்பிரீஷியபில் (acting unimaginable, Music unappreciable!)

சம். அவர் இந்தசீன்லே என்ன செய்கிறார்?

ச. மு. தவம் செய்யரார்! அப்படி தவம் செய்யரப்போ, ரெண்டு அபசுர ஸ்திரிகளே இந்திரன் அனுப்பிக்கரான், அவங்க வந்து இவர் தவத்தெ கெடுக்கப் பாக்கராங்க.

கி. இவர் அதுக்கு எடங்கொடுக்கலெ! அபசுர ஸ்திரிங்க வந்து தவத்தெ கெடுக்கப் பாத்தா, ராஜா எடம் கொடுப்பாரா?

சம். அது யார் சார் அபசுர ஸ்திரீகள்? முன்னயே கேட்க வேணும் இண்ணு பாத்தேன்.

ச. மு. தேவலோகத்து ஸ்திரியுங்கள்! அவுங்களுக்கெல்லாம் அபசுர ஸ்திரீங்க இண்ணு பேர்—தோ மெச்சி சீன் பிகின் (Scene begin) பண்ணரேன்.

[மணியடிக்க ரங்கத்தின் திரை மேலே தூக்கப்படுகிறது. உள்ளே காட்டுத் திரை விட்டிருக்கிறது, மத்தியில் ஒரு ஹார்மோனியம்

பெட்டி வைத்திருக்கிறது, உள்ளே "ஜெயஜெய கோகுல பாலா" பாட்டு கேட்கிறது]

கி. என்ன அத்தான் உங்க ஹீரோவெ (Here) காணோம்?

ச. மு கொஞ்சம் பொறு அப்பேன்—அவர் பாடிக்கினு வர்ரார்.

சம். தவம் செய்யரார் இண்ணீங்களே?

ச மு பாடிக்கினுவந்து தவஞ்செய்வார்—இப்போ பரம சிவனைக் குறிச்சி பாடிகினு வர்ரார் பர்ருங்க.

சம். ஜெயஜெய கோகுலபாலா, இண்ணு பாடராப் போல இருக்குதே?

ச. மு என்னசார்! ஒண்ணும் தெரியாதவரா இருக்கரைங்க! ஸ்டேஜ்லே சைவம் வைஷ்ணவம் சண்டையே கிடையாது, எல்லாம் ஒண்ணுதான்.

ரங்கத்தின்மீது வரதராஜ அய்யங்கார், பாடிக்கொண்டு வருகிறார்:

கி, அதென்ன அத்தான் பின்னலே யாரோ பாடராங்களே?

ச. மு. உனக்கு ஸ்டேஜ் (Stage) ஐப்பத்தி ஒண்ணும் தெரியாதப்பேன்! அதுதான் பின்பாட்டு. (ஹீரோ)பின் பாட்டு இல்லாமே என்னமா பாடரது?

கி. அடடே! இதென்ன அத்தான் பின்னலே என்னமோ வால் பிடிச்சிகினு வர்ரானெ ஒர்த்தன்?

ச. மு. கொஞ்சம்பொறு அப்பேன். அப்பூறம் சொல்ரேன். இப்போ இன்டர்பிரெட் (interpret) பண்ணுதே பாட்டே!

(பாட்டு முடிந்த உடன் சபாபதி ஒரு மாலையைக் கொண்டுவந்து கொடுக்க சபாபதி முதலியார் அதை வரதராஜ அய்யங்காருக்குப் போடுகிறார். வரதராஜ அய்யங்கார் போகிறார்,)

கி. என்ன அத்தான், இப்பவே மாலெயெ போட்டுக்கினு உள்ளே பூட்டாரே! இவர் போர்ஷன் (portion) தீந்து போச்சா என்ன?

ச. மு. என்னப்பேன் சுத்த முட்டாளா யிருக்கரே! இனிமேலேதான் ஆரம்பிக்கப் போரார். முதல் பாட்டு முடிஞ்ச உடனே ஹீரோ ஆக்டரு (Hero actor)க்கு மாலே போடணும் இண்ணு ஸ்டேஜ் (stage) ரூல் (rule) இதெல்லாம் தெரிஞ்சிக்கத் தேவையில்லையா

நீ? இப்ப கொஞ்சம் உள்ளே போயி- நாகத்துக்கு சாப்பிட்டு விட்டு வரப் போறரு

கி. பாத்தா தாகத்துக்கு சாப்பிடரவராட்டம்தா- ணிருக்குது.

சம். இந்த ஆக்டர் (actor) பேர் என்னவுங்கள்?

ச. மு மகரதேசத்து ராஜா—மாரப்பிரதாபன்.

சம். இல்லே இல்லே, இவர் சொந்தபெயர் என்ன இண்ணு கேட்டேன்.

ச. மு. அதுவா, வரதராஜ ஐயங்கார் இவர்தான். இருக்க ரத்துலே பெஸ்ட் அம்பத்தூர் ஆக்ட் (best Ambath ur Actor.)

சம். இவர்ஊர் என்ன அம்பத்தூரா? ஆவடிபக்கத்துலே இருக்குதே அந்த ஊரா?

ச. மு அதல்லாசார்! உங்களுக்கு இங்கிலீஷ் (English) நண்ண தெரியாது போலே இருக்குது; அம்பத்தூர் ஆக்டர் இண்ணு புரொபெஷனல் (Professional) அல்லா இண்ணு அர்த்தம்.

கி. அப்போ, இவருக்கு என்ன வேலே அத்தான்?

ச. மு. முன்னே இந்த ஊர் கிராம முனிசீப்பா யிருந்தார் அப்புரம் கவர்மெண்டுக்கும் இவருக்கும் கொஞ்சம் மனஸ்தாபம்வந்து ரிசைன் (resign) பண்ணிவிட்டார்.

கி. ஸ்! டிஸ்மிஸ் (Dismiss) பண்ணிவிட்டாங்க இண்ணு சொல்லுங்களேன்.

ச. மு. ஸ்! உரக்க கத்தாதே அப்பேன்! அப்புறம் அவர் கேட்டா கோவிச்சிகினு கோவிலுக்குப் பூடுவார்— அப்புறம் நா..கம் நடக்கரதெப்படி?

கி. கோவில்லே இவருக்கு என்ன வேலே?

ச. மு. அது என்னமோ சொன்னுங்க -பேர்மறந்துபோச்சி; நான் ரெண்டு மூணு தரம் அங்கேபாத்தபோது புளி யோரே சாப்ட்டுகினு இருந்தார்.

கி. ஓ! சரிதான்! புளியோரே சாப்பிடர வேலேயா யிருக்கும். அது நல்ல வேலேதான். அதிருக்கட்டும் அந்தாால்என்ன சொல்றோண்ணேங்களே அப்புறம்?

ச. மு அதுவா? அது வாலல்லாப்பேன். இந்த ஹீரோ (Hero) ஆக்டருடைய மெடல் (Medal) கள் அது இல்

லாதே அவர் ஸ்டேஜுக்கு வரதில்லே. காட்லெ போகும் போது அது போட்டுகினு வரக் கூடா திண்ணு, வில்லுமே வரிசையா கட்டி பின்னாலே கொண்டுவரச் சொன்னேன். அது என் ஒரிஜினல் (original) ஐடியா (idea) அப்பேன், சைலென்ஸ்! (silence!) அதோ ஹீரோ (Hero) மறுபடி வர்ரார்!

வரதராஜ ஐயங்கார் மறுபடி ரங்கத்தின்மீது வந்து கண்ணை மூடிக் கொண்டு ஹார்மோனியம் பக்கத்தில் ஒரு ஆசனத்தில் உட்காருகிறார்.

சம். ஏன் சார்? இவர் என்ன காட்டிலே பக்கத்திலேஹார்மோனியம் பெட்டி ஒண்ணு வைச்சிகினு தான் தவசு பண்ராரோ?

ச. மு அப்படியல்லா சார்! அப்புறம் இவர் பாட வேண்டியது இருக்குது இந்த ஹீரோ ஆக்டர் (Hero actor) ஆர்மோனியம் பெட்டி பக்கத்திலே இருந்தாதான் பாடுவார், இல்லாப் போனா முடியாது. அதுக்கோசரம் இத்தே நான் அலௌ allow)பண்ணவேண்டியதாயிருக்கிறது.

ரங்கத்தில் சுந்தரராஜனும், லட்சுமணசாமியும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

கி. என்னாத்தான்! இவ்வளவு அழகா யிருக்கறாங்களே இவங்கள்' இப்படி அபசுரமா பாடராங்களே!

சம். அப்படி சொல்லாதே அப்பேன். அதுக்குதான் மொதலியார் அப்பவே சொன்னாரே, இரண்டு அபசுர ஸ்திரீகள் வருவார்களென்று.

ச. மு. இல்லேசார்! உயரமாயிருக்கிற ஆக்டர் வெரி பேமஸ் பீமெல் ஆக்டர் (actor very famous female actor) இருபத்தைஞ்சி வருஷத்துக்கு முன்னே! அப்போ அவர்பேர் என்ன தெரியுமா? மனமோஹன சபா ரஞ்சித குஞ்சித குயில் சாரீர காவாய் சுந்தரம்.

கி. பாடினபோது சாரீரம் குயிலாட்டம் காணமே அத்தான்!

ச. மு அப்போ அப்படி இருந்தது, ஹீ இஸ் னவ் இந் தி பேமிலி வே (He is now in the family way.) அதனாலே குரல் கொஞ்சம் கெட்டுப் பூட்டுது.

கி. ஹீ இஸ் இந் தி பேமிலி வே (He is in the family

way) யா? அப்படி இண்ணு என்ணு அத்தான் அர்த்தம்?

ச. மு. அதுகூடமாப்பேன் தெரியாது. நீஎன்னமாப்பேன் பி. ஏ. பாஸ் (B. A. Pass) பண்ணே? அவருக்கு கலியாணமாகி பாமிலி மான் (fhmily man) ஆயிவிட்டாரு இண்ணு அர்த்தம், இது இங்கிலீஷ் இடியம் (Idiom.)

கி. ஓ! ஐ சீ! (Oh! I see!)

சம் ஆமாம் சார், என்னமோ காவாய் இண்ணேங்களே அது என்ன?

ச. மு. அதுவா! அது காவாய் என்றது, இந்துஸ்தானி வொர்ட் (Hindustani word) ரொம்ப சைன்டிபிக் (scientific) பாடகன் இண்ணு அர்த்தம்.

கி. அத்தான், ஒரு ஸ்மால் சஜ்ஜஸ்ஷன் (small suggestion) இனிமேலே இவருக்கு பீமெல் பார்ட் female part) கொடுக்காதைங்க அத்தான்.

ச. மு ஐ அக்ரீ, ஹி ஹேஸ் பீன் ஒன்லி ஆன் எப். ஏ ஐ திங் ஐ வில் மேக் ஹிம் ஆன் எம். ஏ. ஹியர் ஆப்டர் (I agree He has been only an F A. I will make him an M A. here after)

சம். அதென்னுசார், நீங்க எப்படி இவரே எம். ஏ. ஆக்கிறது?

ச. மு. ஓ! அது உங்களுக்குத் தெரியாது! அதுக்குத்தான் எப்பவும் ஸ்டேஜ் (stage) ஓட டச் (touch) லேஇருக்கோணும். எப். ஏ. (F. A.) இண்ணு, பிமேல் ஆக்டர் (Female actor) இண்ணு அர்த்தம். எம் ஏ. (M. A.) இண்ணு, மேல் ஆக்டர் (Male actor) இண்ணு அர்த்தம்.

வரத (ரஙகத்தில்) ஏண்டா! சுந்தரம்? ஆரம்பிக்கரது தானே எத்தனி நாழிடா கண்ணே மூடிக்கினு இருப்பேன்?

சு. இதோ ஆரம்பிச்சூட்டேன். மொதலியார் எல்லாம் பேசிக்கினு இருந்தாங்களே இண்ணு சும்மா இருந்தோம் - அடி பிரிய சகி! யாரோ ஒருவன் மன்மத புருஷன் இங்கே உட்கார்ந்து தவம்செய்கிறார் பார்த்

தாயடி! இவர்மேனியின் காந்தியைக் காண என் கண் கூசுகிறதடி! இவர் அழகைப் பார்க்கும்பொழுது என் அங்கமெல்லாம் பங்கமாய்ப் போகுதடி! இவருடைய டாலேக கருதும்பொழுது என்கால் தள்ளாடுதடி! இவருடைய டீக்கை யோசித்தால் என் பாடி வீக் (body weak) ஆகப்போகுதடி!

ச. மு. ஏன் சார் என்னமா யிருக்கிறது புரோஸ்? (prose)

சம். பேஷ்! பேஷ்!—ஆனா ஒரு சந்தேகம், கடைசியிலே ஏதோ சில இங்கிலீஷ் வார்த்தைகள் உபயோகப் படுத்தினாற் போலிருக்கிறதே?

ச. மு. ஓ ஓஸ்! (oh !yes') தேவலோகத்து ஸ்திரிங்கல்லா? அவங்களுக்கு எல்லா பாஷையும் தெரியாதா?

சு. (ரங்கத்தில்) இவர் யாராயிருப்பாரடி? இவர் இந்திரனோ? சந்திரனோ? தந்திரனோ? மந்திரனோ? சுந்தரனோ? யந்திரனோ? ஒன்றும் தெரியவில்லையடி? நீயாகிலும் சொல்லடி! (பாடுகிறான்.) "மெத்த அழகுள்ள துரை இவர் அஞ்சடி"

கி. அம்மா, கொஞ்சம் உங்கபாட்டே நிறுத்துங்க!—அதென்ன அத்தான்? அஞ்சடி-என்ன அத்தான்? நீங்க எழுதின பாட்டா இது?

ச. மு. இல்லே அப்பேன், சாங்(song)மாத்திரம் நம்ப பிரென்ட் (friend) ஒருத்தர் இருக்கிறாரு, சுப்பிரமணிய முதலியார், நல்ல கம்பாசிடர், அவர் எழுதி அனுப்பிச்சார்.

கி. சுப்பிரமணிய முதலியாரா? அவர் கம்பாசிடர் (compositor)ஆ? அவர் பாங்க் மானேஜர்(Bank Manager) ஆ இல்லே?

ச. மு. ஆமாம்பேன் அவர்தான்; அவர்தான் இந்த டிராமா சாங்க் (drama song) எல்லாம் கம்போஸ் பண்ணார்.

கி. ஓ! ஐ சி! சாங்க் கம்போஸ் (Oh! I see! song compose) பண்ரவர் கம்பாசிடர் (compositor) ஓ!

சம். சரிதானுங்க—அந்த பாட்லே அஞ்சடி என்னு இருக்குதே அதுக்கு அர்த்தம் என்ன?

ச. மு. அது கொஞ்சம் எக்ஸ்பிளெயின் (explain) பண்ணணும்னானு, அவர் எழுதிஅனுப்பிச்ச பாட்லே'ஆரடி இண்ணு எழுதி அனுப்பிச்சாரு. 'மெத்த அழகுள்ள துரை இவர் ஆர் அடி' இண்ணு எழுதி யிருந்தது. ஹீரோ ஆக்டர் (Hero actor) உயரம் பார்த்தேன், அஞ்சடிதான் இருந்தது, உடனே சேன்ஜ் change) பண்ணிவிட்டேன். என்னு பாருங்க, ஆஸ் அன் எடு கேடட் மான் ஐ மஸ்ட் பி ஆக்குயுரேட்—எஸ் கோ ஆன் (as an educated man I must be accurate—yes go on) நாழி ஆகுது! ஹீரோ)கமென்ஸ் சாங்க்(Hero commence song.)

வ. (ரங்கத்தில்—கண் விழித்து) மொதலியார், கொஞ் சம் எக்ஸ்கியூஸ் (excuse) பண்ணணும், அந்த பாட்டு எச்சுஸ்ருதி, இண்ணைக்குப் பாட முடியாது.

ச. மு. அது ஏன் முடியாது ?

வ. கொஞ்சம் திடீர் இண்ணு தொண்டெ கட்டிகிச்சி.

ச மு. அது ஏன் அப்படி ?

வ. மொதல்பாட்டு பாடின உடனே தொண்டையெ கொஞ்சம் கிளீன் (clean) பண்ணிக்க உள்ளே போனபோது நம்ப பிரெண்ட் (friend) தண்ணி யிலே கொஞ்சம் சக்கரை கலந்து சாப்பிட்டா நல்லது இண்ணு சொன்னரு. அத்தெ டிரை (try) பண்ணி பாத்தேன். அது இன்னம் நண்ணு கட்டி கிச்சி.

ச. மு. வெரி பாட்! (very bad!) தண்ணியிலே சக்கரையே போட்டு யாரையா உங்களே சாப்பிடச் சொன் னது? இதுக்கெல்லாம் பெஸ்ட் ரிமெடி டைல்யூடெட் வாடர் ! (best remedy diluted water !) அத்தெ சாப் பிட்டா சரியா பூடும்.

சம். அது என்னுவுங்க டைல்யூடட் வாடர் ? (diluted water)

ச. மு. அதாம் பியூர் வாடர் (pure water)

கி. ஓ! டிஸ்டில்ட் வாடர் (Oh! distilled water) ஆ!

வ. அதுக்குபதிலா வேறே பாட்டு பாட ரேனுங்க தக்குலே—ஆஹா! யார் இந்தப்பெண்மணி! குயிலையுங் கொன்று விடும்படியான குரலோடு பாடுகிருள். இந்த பாட்டைக் கேட்ட உடன் தவஞ் செய்வதினுல் என் தேகத்திற்குண்டான வெப்பம் எல்லாம் போய் சில் லென்று போய் விட்டது ஆஹா, நான் என்ன செய்யப் போகிறேன்! அந்த வெப்பம் போய் விட்டதே என்று சந்தோஷப் பட ஆரம்பிக்குமுன் மன்மதனுலுண்டாம் வெப்பம் என்னைக் கொளுத்துகிறதே! [பாடுகிருன்.]

ராகம்—கமாஸ், தாளம்—ரூபகம்.

பல்லவி.

நீயருள் செய்யவேண்டு மெனக்கே
நேசக் குயிலே நல்ல ஆசைக் கிளியே (நீ)

அநுபல்லவி.

அல்லும் பகலும் சொல்ல முடியாத ரீ
[மூச்சு தெணறுகிருன்.]

ச. மு. அடடா! பொறக்கே ஏறிஞப்போலே இருக்குது தலையிலே தட்டுங்கையா! தலையிலே தட்டுங்கையா!

ச. (உள்ளே இருந்து ஓடிவந்து ஹீரோ ஆக்டர் (Hero actor) தலையில் நன்ருகப் புடைக்கிருன்.)

வ. மொள்ள! மொள்ள!

சம். கொஞ்சம் நிதானிக்கட்டும் சார்! பாபம்! அல்லும் பகலும் சொல்லமுடியாத ரீ! எவ்வளவு பெரிய ரீயாயிருக்கணும்! அத்தெ பாடரது இண்ணு கஷ்டம் பாருங்க.

கி. அது என்ன அத்தான் அவ்வளவு பெரிய ரீ!

ச மு. அது பாட்டிலே அப்படித்தான் வரும், அல்லும் பகலும் சொல்ல முடியாத—அப்புறம் இழுக்கணும்—அத்தொட்டு ரீ இண்ணு இழுக்கரது வழக்கம்

கி. அதுக்காக நீயே இழுப்பானே ?

ச. மு நீ யெ தான் இழுக்கமுடியும்.

சம். பாவம் கஷ்டம்தான்! பாட்டே நிறுத்திவிட்டு புரோஸ் (Prose) சொல்லச் சொல்லுங்க.

ச. மு. ஆல் ரைட் ! சூன் புரோஸ்' (All right ! soon Prose!)

மு அப். அடி தோழி ! அவரிடம் சென்று அவர் யாரென்று கேட்டுவா.

இ அப். ஐயா ! தாங்கள் யாரென்று என் தோழி கேட்டு வரச்சொன்னுள்.

வ. அம்மா! இதோ சொல்லுகிறேன் சவிஸ்தாரமாய்—என் நா மிகவும் உலர்ந்துபோ யிருக்கிறது. தாகத்திற்கு எங்காவது கொஞ்சம் ஜலம் கொண்டுவா சீக்கிரம்! சீக்கிரம்! [ரங்கத்தின்மீது மூர்ச்சையாகிறுர்.]

இ. அப். இதோ போரேன்—"போரேன் இதோ போரேன் இதோ" [என்று சவுக்கமாய்ப் பாடுகிறுள்.]

கி. இதென்ன அத்தான் இது ? ஹீரோ (Hero) தாகத்துக்கில்லாதே மூர்ச்சையாயி பூட்டாப்போலே இருக்குது ! இப்போ போயி, சவுக்கமா என்னமோ பாடரானே ! போரேணிதோ போரேணிதோ இண்ணு பாடிக்கினு போகா திருக்கிறுனே! இங்கே பாட்டே போடரதே தப்பு, அதுலே சவுக்கம்! அது லே அபசுரம்! என்ன அத்தான் இது ? சீக்கிரம் போகச்சொல்லுங்க அத்தான் !

ச. மு. ஐ திங்க் யூ ஆர் ரைட்(I think you are right) நீ போ சீக்கிரம். ஆனல் சீக்கிரம் தண்ணி கொண்டு வராதே ! மொள்ளமா சரியான டைத்துக்கு வா !

[இரண்டாவது அப்சர ஸ்திரி உள்ளே போகிறுள்.]

சம் அது என்ன சார் சீக்கிரம் கொண்டு வரவேண்டாம் என்று சொன்னீர்களே ?

ச. மு. சீக்கிரம் வந்தால் சிட்யூஏஷன் (situation) கெட்டுப் பூடும்—இப்போ இம்பார்டென்ட் சிட்யூஏஷன்—

கேர்புல் (important situation careful) ஆ வாச் (watch) பண்ணுங்க. ஹீரோ (Hero) வுக்கு வாஸ்தவமா நாகம் இண்ணு நினைச்சிகினிங்க? ராங்! (Wrong) அவ்வளவு நண்ணு ஆக்ட் (act) பண்றான் ஹீரோ (Hero!) இந்த அபசுர ஸ்திரியே அனுப்புச்சிவுட்டு, ஹீரோயின் (Heroine) ஒட தனியா பேசணும் இண்ணு இந்தயுக்தி ஹீரோ (Hero) செய்யரார்!

சம். ஓ! ஐ சி! (Oh! I see!) அது நல்ல யுக்திதான்—ஆனால் இந்த ஆர்மோனியம் மான் (Man) இருக்கிறரே ஸ்டேஜ் (stage) லே அது பரவாயில்லேயோ?

ச. மு. அது இல்லாதது போலே பாவனே! கேர்புல்லி அப்சர்வ் (carefully observe!) இப்போதான் பியுடிபுல் பிட்ஆப் ஆக்டிங்—ஹிரோ அண்டு ஹிரோயின் பால் இன் லவ் வித் ஈச் அதர் (beautiful bit of acting—Hero and Heroine fall in love with each other)—வாச் தேர் ஐஸ் (Watch their eyes!) கண்ணோடு கண்ணிணை நோக் கொக்கின் வாய்ச் சொற்கள் நெவர் மைண்ட், (nevermind) இண்ணு ஆக்ட் (act) பண்ராங்க பாருங்க.

[இரண்டு நடிகர்களும் ரங்கத்தின் இரண்டு மூலைக்குப் போய் நின்று கொண்டு பிறகு மெல்ல நெருங்குகிறார்கள்.]

வ. பிராணநாயகி!

மு. அப. பிராணநாத்!

ச. மு. கொஞ்சம் பொறுங்கள்—இப்போ கிஸ் (Kiss) பண்ணப் போராங்க! அந்த சமயத்துலே நாகத்துக்கு கொண்டு வரப்போன இரண்டாவது அபசுர ஸ்திரீ வர்ரா—கோ ஆன் (go on) [நடிகர்கள் முத்தமிடப் போவது போல நிற்கிறார்கள்]

ச. மு. உம்! உம்! எங்கே அந்த அபசுர ஸ்திரி! வரச் சொல் சீக்கிரம்!—அடே சபாபதி!

ச. ஏம்பா!

ச. மு. அந்த அபசுர ஸ்திரீயெ சீக்கிரம் வரச்சொல்லுடா! எத்தனை நாழியா இந்தமாதிரி இவங்க நின்னுக்கினு இருப்பாங்க?

ச. அந்த பொம்பளே உதட்டுக்கு லிப் சால் (lip salve) போட்டுக்கிருப்பா..

ச. மு. அடே! சீக்கிரம் கல்தா கொடுத்தனுப்பு அந்த ஆக்டரெ! (actor)! [சபாபதி போய் இரண்டாவது அப்சர ஸ்திரீ வேஷதாரியை கழுத்தைப் பிடித்து ரங்கத்தின் மீது தள்ளுகிறான்.]

இ. அப. இதோ தண்ணிகொண்டு வந்தேன்!

(கதாநாயகனும் கதாநாயகியும் விரைந்து பிரிகிறார்கள்; ப்பொழுது கதாநாயகனுடைய டோபா கதாநாயகியின் கையிலும், கதாநாயகியின் டோபா கதாநாயகன் கையிலும் சிக்கிக்கொள்ள. எல்லோரும் நகைக்கிறார்கள்.)

கி. பியுடிபுல் லவ் சீன்! ஸ்பெளின்டிட்! ஸ்பெளின்டிட் ஆன்கோர்! ஆன்கோர்! (Beautiful! Love scene splendid splendid! Encore! Encore!)

ச. மு என்ன ஐயா இது? என்ன ஐயா இது?

வ. இல்லேங்கோ என் மோதிரத்துலே டோபா (topa) மாட்டிகினு வந்துட்டுது.

ச. என்கையிலே அவர் டோபா (topa) மாட்டிகிச்சிங்க!

ச. மு. தூத்தெரி! அத்தெகூட கவனிக்க முடியலேயா! —போதும் ஆக்ட் (act) பண்ணது! உடச்சொல்லு கர்டன் (curtain) ஏ! கேசு (Kesu) உடு சர்டன் (curtain) ஏ!

(திரை விடும்பொழுது அது இரண்டாவது அப்சர ஸ் ரியின் தலைமீது விழப்போகிறது.)

இ. அ. ஐ ஐயோ! என்பாட்டெண்ணு இரு குதுங்க! [திரைகீழே இறங்க இறங்க தானும் குனிந்து கொண்டே பாட்டைப் பாடி முடிக்கிறாள்.

ச மு. இனிமேலே இந்த ஆக்டர்ஸ்களுக்கெல்லாம் பாட்டெ கொடுக்கக்கூடாது! பெரிய நியுசென்ஸ் (Nuicence ஆ போச்சுது! - சபாபதி! சபாபதி

ச. [உள்ளிருந்து] ஏம்பா! ஏம்பா!

ச. மு. நெக்ஸ்ட் சீன் (Next scene) உடனே ஆரம்பிக்கச் சொல்!

ச. [வெளிவந்து] முடியாதப்பா! அந்த முதலியாரும் நாயுடும் ரெண்டு பேரும் இந்த காகிதத்தே உங்ககிட்டே அவசரமா கொடுக்கச் சொல்லிவுட்டு அவசரமா மோடார் கார்லே ஏறிகினு பூட்டாங்கப்பா.

ச. மு. இதென்னடா இது ஒண்ணு! (காகிதத்தைப் பிரித்துப் படிக்கிறான்) டியர் சார்—கைன்ட்லி எக்ஸ்கியூஸ் ஆப்சன்ஸ் பிரம் ரிஹர்சல். வி ஆர் அர்ஜென்ட்லி கால்ட்அவே டு அவர் முனிசிபல் கோர்ட் அபிஷல்ஸ் பார்டி, வில் அடென்ட் சம் அதர் டைம், எக்ஸ்கியூஸ் பென்சில் (Dear sir, Kindly excuse absence from rehearsal. We are urgently called away to our Municipal official's Party, will attend some other time, excuse pencil)—பென்சிலேயா நான் எக்ஸ்கியூஸ் (excuse) பண்ரது!—யுவர்ஸ்வெறி ஒபீடியன்டிலி (Yours very obdiently)—இதுலே ஒபீடியன்டிலி (obdiently) என்ன? யுவர்ஸ் வெரி டிஸ்-ஒபிடியன்டிலி (Yours very dis-obediently) இண்ணு எழுதரத்துக் கென்ன!—இப்போ என்னப்பேன் செய்யரது?

கி. ஏன்? என்ன அத்தான் சமாசாரம்?

ச. மு. சமாசாரம் என்ன—தர்ட் ஹீரோ அன்ட் ஹீரோயின் (Third Hero and Heroine)டும்கி கொடுத்தாங்க. நேத்தே ஒருத்தன் தைசிஸ் (Thysis) இண்ணு, இன்னொருத்தன் கொஞ்சம் ஹிப்நாடிசம் (Hypnotism) ஆ, இருக்குது இண்ணுபாட்டம் bottom)போட்டான்.

கி. அதென்ன அத்தான் ஹிப்நாடிசம் (Hypnotism?)

ச. மு. ஹிப்நாடிசம் (Hypnotism) இண்ணு ஹிப் (Hip)லே-இடுப்புலே பெயின் (Pain) இண்ணு அர்த்தம்.

சம். தைசிஸ் (Thysis) இண்ணு தை (thigh) லே பெயின் (Pain) இண்ணு அர்த்தமோ?

ச. மு. ரைட் யூ ஆர் (Right you are!) நீங்க சீக்கிரம் அன்டர்ஸ்டேன்ட் (understand) பண்ணிக்கரைங்க சார். என் பிரதர் இன் லா (Brother-in-law) வுக்கு தெரியலே அவ்வளவு சீக்கிரம்!

கி. அது போனப்போகிறது இப்போ என்ன செய்யப் போரைங்க?

ச. மு. அதுதான் யோசிக்கிறேன். ஒரு இன்டர்வல் ஆப் டுவெண்டி மினிட்ஸ் (Interval of 20 minutes) கொடுக்கலாமா?

கி. ஏன், ஒரு இன்டர்வல் ஆப் செவன் டேஸ்(Interval of seven days) கொடுத்தூடுங்களேன் ஒரே முட்டா?

ச. மு. சே சே! அது நண்ணா யிருக்காதப்பேன்!—லாஸ்ட் சீன் (Last scene) தவிர மற்றதெல்லாம் ஒமிட் (Omit) பண்ணிவிடரேன்.

கி. அது நல்லவழி அத்தான், எனக்குக்கூட பசிக்குது.

சம். அப்படியே செய்யுங்கள். இதென்ன—நாடகம் டிராஜடி (Tragedy) ஆ முடியுதா, காமடி (comedy) ஆ முடியுதா?

ச. மு. இது டிராஜடி (Tragedy) ஆ ஆரம்பிச்சி காமடி (comedy) ஆ முடியுது!—லாஸ்ட் சீன கார்னேஷன் டாப்லெக்ஸ் (Last scene coronation! Tableaux.)

சம். இண்ணா?

ச. மு. டாப்லெக்ஸ் (Tableaux) இண்ணா சும்மா அப்படியே நிற்கிறது, இண்ணு அர்த்தம். இதோ கொஞ்சம் ஒரு நிமிஷம் பொறுங்க. உள்ளே போயி அரேன்ஜ் (arrange) பண்ணிவிட்டு வாரேன். [உள்ளே போகிறார்.]

கி. ஏன்சார்? நீங்க இன்னாருண்ணு சொல்லி விடவா?

சம். உம்—சொல்லிவிடுங்கள்-- இல்லாப்பொனா--நம்போ சொல்லாதே அவருக்குத் தெரிஞ்சா—நண்ணா யிருக்காது. என்னமானு தப்பா நெனேச்சிக்கிவாரு—

கி. ஒ னோ! ஹி வில் நாட் மிஸ் அண்டர்ஸ்டாண்ட்(Oh No! He will not misunderstand)

சபாபதி முதலியார் மறுபடி வருகிறார்.

ச. மு கடைசி டாப்லக்ஸ், பைவ் மினிட்ஸ் (Tableaux! five Minutes) ஆக்டர்செல்லாம் அசையாமே நிப்பாங்க.

[மணியடிக்க, திரைமேலே போக, மகரதேசத்து மன்னனுடைய பட்டாபிஷேகம், தோற்றக் காட்சியாகக் காட்டப் படுகிறது.]

ச. (பூசக்கரக் குடையைப் பிடித்துக்கொண்டு) அப்பப்பா! கை நோவுதப்பா! நோவுதப்பா!

ச. மு. அடே சத் பேசாதே! வாயெ மூடிக்கினு இரு! இப்பொ நீ பேசக் கூடாது!

ச. சாயுதப்பா! சாயுதப்பா!

[பிடித்த குடையை மகரதேசத்து மன்னன் மகுடத்தின்மீது விழும்படி விட்டு விடுகின்றான். மகுடம் கீழே விழ, அதைப் பிடிக்கப்போய் மகத தேசத்து மன்னன் கீழே விழுகிறான். ரங்கத்தின் மீதிருந்த நடர்களெல்லாம் ஒருவர் மேல் ஒருவராய் விழுகிறார்கள்.]

கி. ஸ்பெளின்டிட்! ஸ்பெளின்டிட்! (splendid splendid!) அத்தான்!

சம். சார், ஒரு நிமிஷம் எல்லா ஆக்டர்ஸ்களையும் அப்படியே அசையாமே இருக்கச் சொல்லுங்க! இதுவே ஒரு புது டாப்லொ (Tableau) ஆகும்!

ச. மு. என்னசார் அது! நான் காமடி (comedy) ஆ முடியணும் இண்ணு டிராஜடி (Tragedy) ஆ முடியுதே இத்தே நான் என்ன டிராஜிக் காமடி (Tragic comedy) இண்ணு கூப்பிடரதா? காமிக் டிராஜடி (comic tragedy) இண்ணு கூப்பிடரதா?

சம். முதலியார், எனக்கு ஒரு சஜ்ஜஸ்டன் (suggestion தோணுது, இத்தே இப்படியே பிரின்ட் (Print) பண்ணி பார்ஸ் (Farce) இண்ணு போட்டுடங்களேன்?

ச. மு. உங்களுக்கு கொஞ்சம் பிரெயின் (Brain) இருக்குது சார்! அப்படியே செய்யரேன்.—அப்பேன், இவர் யாரப்பேன் சொல்லலையே எனக்கு இதுவரைக்கும்.

கி. இவர் தான் அத்தான்—சம்பந்தமுதலியார்.

ச. மு. ஒ ஐ சி! (Oh I see!) அப்பவே கொஞ்சம் கெஸ் (Guess) பண்ணேன் நானு.—நீங்க ரொம்ப குறும்புக்காரரா இருக்கரைங்க சார்!—ஆனாலும் ரொம்ப சந்தோஷம். கிளாட் யூ மேட் மை அக்குவெயின்டென்ஸ் (Glad you made my acquaintance!)

சம். எனக்கும் ரொம்ப சந்தோஷம்.

ச. மு. ஆல்ஸ் வெல் தட் பிகின்ஸ் வெல் (All's well that begin's well) இப்போநம்ப, என்னசெய்யலாம் சார்?

சம். மங்களம் பாடலாம் என்று தோணுது.

ச. மு அப்படியே செய்யலாம், எல்லாம் "கல்லார்க்கும் கற்றவர்க்கும்" பாடுங்க.

[ரங்கத்தில் அப்படியே பாடுகிறார்கள்.
நாடகம் முடிகிறது]

புத்தகம் கிடைக்குமிடம்:—

ப. சம்பந்த முதலியார் பி.ஏ., பி.எல்.,
70, ஆச்சாரப்பன் தெரு.
சென்னை-1.